விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 03 மார்கழி 20 ஜ. ஆகிர் பிறை 17 இதழ்: 254
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4-1-1991

## 50,000 காணி உறுதிகள் பதிவு செய்யப்படவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஏழு மாதங்களாக ஐம்பதினாயிரம் காணி உறுதிகள் பதிவுசெய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

1989-ம் ஆண்டு மே மாதத்திலிருந்து 1990 டிசம்பர் 31ம் திகதி வரை இந்தக் காணி உறுதிகள் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ். காணி பதிவகத்தில் பெப்ரவரி மாதம் முதல் காணி உறுதிகள் பதிவு வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

31 ஊழியர்கள் கடமையாற்ற வேண்டிய மேற்படி பணியகத்தில் தற்போது 20 ஊழியர்களே கடமையாற்றுகிறார்கள்.

## ராணுவ நடவடிக்கை 7 நாட்களுக்கு நிறுத்தம்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா அரசு இராணுவ

(4-ம் பக்கம் பார்க்க)

## ஈராக் தூதரக ஊழியர் வெளியேற்றம்

(லண்டன்)

லண்டனிலுள்ள ஈராக் தூதரகத்தில் கடமையாற்றிய 8 ஊழியர்களையும், 67 ஈராக் குடிமக்களையும் 24 மணிநேரத்துக்குள் நாட்டைவிட்டு வெளியேறும்படி பிரிட்டன் உத்தரவிட்டுள்ளது.

# விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க அரசு நிபந்தனை விதிக்கவேண்டும்

## ஆறு கட்சிகள் வலியுறுத்து

[கொழும்பு]

இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்வதற்குமுன் விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை ஒப்படைத்துவிடவேண்டுமென அரசு முன் நிபந்தனை விதிக்க வேண்டுமென்று நேற்று கொழும்பில் நடைபெற்ற அரசியல் கட்சிகள் கூட்டத்தில் ஆறு கட்சிகள் கருத்து வெளியிட்டதாக தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஈ. என். டி. எல். எப், ஈ. பி. டி. பி, உட்பட ஆறு கட்சிகள் மேற்படி கருத்தை வலியுறுத்தியதாக தெரிகிறது. இக் கட்சிகள் கீழ்காணும் கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளன.

விடுதலைப் புலிகள் இலங்கை

(4ம் பக்கம் பார்க்க)

## உணவு உற்பத்தியில் புதிய கருத்துக்களை முன்வைக்க வேண்டும் - யோகி

(யாழ்ப்பாணம்)

இன்றைய இக்கட்டான நிலையில் உணவுற்பத்தி சம்பந்தமாக புதிய கருத்துக்கள் திட்டங்கள் மக்கள் முன் வைக்கப்பட வேண்டும், இம்முயற்சிக்கு பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.''

தமிழ் ஈழ விடுதலைப் புலி

(4-ம் பக்கம் பார்க்க)

## இருவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ், பெருமாள் கோவிலடியை சேர்ந்த இ. தர்மராஜா 3 மாதத்தின்பின் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளார் இவருடன் மற்றொருவரும் விடுதலைசெய்யப்பட்டார்.

இவர்கள் இந்தியாவுக்கு அகதியாக படகில் செல்லும்

(4-ம் பக்கம் பார்க்க)

## நாற்பது தமிழ் பொலிஸார் அனுராதபுரத்திற்கு மாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலிருந்து சம்பளம் பெறுவதற்காக வவுனியா சென்ற நாற்பது தமிழ் பொலிஸார் அனுராதபுரத்துக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு வீதி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறுமாதகாலமாக பொதுமக்களின் பாவனைக்கு தடைப்பட்டிருந்த ஆனையிறவு வீதி விரைவில் திறந்துவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மின்சார மதிப்பீட்டு வேலை; அரசு ஆராய்கிறது

[யாழ்ப்பாணம்]

மாங்குளத்தில் சேதமடைந்த மின்சார கேபிள்களை மீண்டும் புனரமைத்து வட பகுதிக்கு மின்சாரம் வழங்க விரைவில் அனுமதி வழங்கப்படுமென தெரியவருகிறது.

வடபிரதேச மின்சாரசபை தெரிவித்திருந்த மதிப்பீட்டு வேலைகளை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும்

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கு அகதிகளுக்கு வடமராட்சியில் 1000 குடிசைகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப்பகுதியில் தங்கியிருக்கும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த அகதிகளுக்கு யாழ். செஞ்சிலுவைச்சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க செயற்குழுவின் அனுசரணையுடன் தற்காலிகமாக ஆயிரம் குடிசைகளை அமைத்துவருகிறது.

நாகர்கோயில், அம்பன், செம்பியன்பற்று, மருதங்கேணி, தாளையடி, உடுத்துறை, முள்ளியான், கட்டைக்காடு ஆகிய கிராமங்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். செயலகத்தில் 25,000 பிறப்பு சான்றிதழ் விண்ணப்பங்கள் தேக்கம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகத்தில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் புத்தகங்கள் இல்லாத காரணத்தினால் இருபத்தையாயிரம் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள பதிவாளர் நாயகத்திடம் பலதடவைகள் இது தொடர்பான புத்தகங்களை அனுப்புமாறு கேட்டும் இன்னும் அனுப்பிவைக்கப்படவில்லை.

குறைந்தது 500 பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் புத்தகங்கள் யாழ். செயலகத்திற்கு

(4ம் பக்கம் பார்க்க)

## வ. பி. போ. சபை மீது விமான தாக்குதலுக்கு தொழிற்சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''கோண்டாவிலிலுள்ள வ. பி. போ. சபை காரியாலயத்தின்மீது ஸ்ரீலங்கா விமானப்படையால் நடத்தப்பட்ட

[4-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### FUDO-TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும், சிறந்தமுறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலையவீதி 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணக்கிளை, பிரதான வீதி, மானிப்பாய். சி-4196

### கொம்பியூட்டர் கல்வி

கொம்பியூட்டர் கல்வி Basic Language திங்கள், புதன்வகுப்புகள் நேரம் 10-30-12-30 ஆரம்பம்: 7-1-91 School of Business Administration, 16, 3-ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (சி-4221)

### வாசகர் பரிசுக் கூப்பன்

மீரா வெளியீடான செங்கை ஆழியானின் அக்கினி நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை உடனே நிரப்பி அனுப்புங்கள். குலுக்கலில் தெரிவு செய்யப்படும் முதல் பத்து வாசகர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படும். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம், திருக்கணிதம், சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி 4235)

## அதிபர்கள் சங்கம்

(வேலணை)

தீவகத்திலுள்ள பாடசாலைகளில் இடம்பெற்றுவரும் குறைநிறைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தீவக மட்டத்திலான பாடசாலை அதிபர்கள் ஒன்றுகூடி தீவகப் பாடசாலை அதிபர்கள் சங்கமொன்றினை ஆரம்பித்துள்ளனர்.

## கிராம சேவகருக்கு பயிற்சி

(கொழும்பு)

நாடுபூராகவும் பணிபுரியும் 14, 850 கிராமசேவையாளர்களுக்கு மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் குறித்து பயிற்சி வழங்கப்படும். இதற்கான திட்டத்தை ஆரம்பித்திருப்பதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிவித்துள்ளார். (எஸ்)

## கூட்டத்தில் குழப்பம்

(டாக்கா)

பங்களாதேஷில் சிட்டகொங் துறைமுகப் பகுதியில் நடைபெற்ற அரசியல் கூட்டத்தில் எதிரணியினர் பெற்றோல் குண்டுகளாலும், கத்திகளாலும் தாக்கி ஐம்பத்தைந்து பேரைக் காயப்படுத்தியுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து இப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## மீண்டும் கொட்டடியில்

ஆரம்பம்: 05-01-1991

PERSONAL INSTITUTE

இல. 2, சீனிவாசகம் வீதி

ஆண்டு 9, 10, 11.

விஞ்ஞானம்: திரு. இரா. செல்வவடிவேல்
கணிதம்: திரு. சண்
தமிழ்: திரு. S. கதிர்காமத்தம்பி
ஆங்கிலம்: திரு. T. சௌந்தரபாண்டியன்
சமூகக்கல்வி: திரு. ராஜன்
★ ஏனைய பாடங்களும் நடைபெறும்.

★ YARL HALL ★

93A, MAIN STREET

வகுப்புகள் ஆரம்பமாகின்றன

(சி-4286)

## கூட்ட அறிவித்தல்

மேர்ச்சண்ட் பினன்ஸ் லிமிட்டெட்டின் பதினோராவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

1991-ம் ஆண்டு தைமாதம் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 555 இலக்க அலுவலகத்தில் நடைபெறும் என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

★ வழமையான நடவடிக்கைகள்
★ உபகாரப்பங்கு வழங்கல்--10-க்கு 3
★ உரிமை வழங்கல்--ஒன்றுக்கு ஒன்று
★ அனுமதித்த மூலதனத்தை ரூபா 100 லட்சமாக உயர்த்தல்

மேர்ச்சண்ட் பினன்ஸ்
லிமிட்டெட்,
இல. 555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
திகதி: 04-01-1991

அ. சோமசுந்தரம்பிள்ளை
தவிசாளர்

## கூட்ட அறிவித்தல்

கொன்சல்ரன்சி அன்ட் பினன்ஸ் அன்ட் டெவலப்மென்ட் லிமிட்டெட்டின் பன்னிரெண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

1991-ம் ஆண்டு தை மாதம் 25-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 555 இலக்க அலுவலகத்தில் நடைபெறுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

★ வழமையான நடவடிக்கைகள்

கொன்சல்ரன்சி அன்ட் பினன்ஸ் அன்ட்
டெவலப்மென்ட் லிமிட்டெட்,
இல. 555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
திகதி: 04-01-1991

அ. சோமசுந்தரம்பிள்ளை
தலைவர்

(ஏ 957)

## புதிய அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்ட அரச அதிபராக திரு எஸ். ரி. மார்க்கண்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய திரு. தர்மலிங்கம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. [153]

## உ. அ. அதிபர் ஓய்வு பெறுகிறார்

[மானிப்பாய்]

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் வை. இராசையா ஓய்வுபெற்றுள்ளார்.

இவரது இடத்துக்கு யாழ். செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக பணிபுரிந்த திரு. க. நடராசா நியமனம் பெற்றுள்ளார். (71)

## A/L - 91, 92

புதிய பிரிவுகள் ஆரம்பம்

05-01-1991

சனிக்கிழமை பி.ப. 2.30 மணி

PHYSICS - திரு. வர்ணம்
CHEMISTRY - திரு. தில்லை
BOTANY - திரு. நேசன்
ZOOLOGY - திரு. நாகநாதன்
PURE / APPLIED MATHS - திரு. நல்லையா / திரு. கிருஷ்ணா

NEW MASTER INSTITUTE

B. M. C. LANE, JAFFNA.

(ஏ-954)

## மகாபொல முற்பண கொடுப்பனவு - ஜனவரி 91

பின்வரும் மாணவர்களுக்கு மேற்படி கொடுப்பனவுக்குரிய ஒழுங்குகள் கீழ்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

1. கலைப்பீட 1-ம் வருட மாணவர்கள்

| | |
|---|---|
| கலைப்பிரிவு | 03-01-91—9-00—12-00 |
| வர்த்தகப் பிரிவு | 04-01-91—1-30—3-00 |
| நிர்வாகப் பிரிவு | 08-01-91—9-00—12-00 |

2. விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவர்கள்

| | |
|---|---|
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு | 03-01-91—1-30—300 |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 04-01-91—9-00—12-00 |

3. மருத்துவபீட 1-ம் மாணவர்கள் — 08-01-91—1-30—3-00

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கவேண்டியவை

I. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
II. ரூ. 2/- பெறுமதியான முத்திரை
III. மாணவர் பதிவுப்புத்தகம்

பதிவாளர்

(ஏ 966)

## சமாதானமும் சபலமும்!

யுத்த நிறுத்தத்தின் நம்பகத் தன்மையை சுண்டிப் பார்த்து பரீட்சிக்க அரசு மூன்று நாள் அவகாசம் எடுத்து சமாதானத்தில் சந்தேக சலனத்தை ஏற்படுத்தியுள்ளது. தெரிந்ததே!

சந்தேகம், சபலம் என்பவை எவரையும் உள்ளிருந்தே கொல்லும் வியாதி - இவ்வியாதி இராமபிரானையும் விட்டு வைக்கவில்லையாம்!

இராம - இராவண யுத்தம் முடிந்து, மீட்கப் பட்ட சீதாபிராட்டியாரின் நம்பகத்தன்மையைப் பரீட்சிக்க அக்னி பிரவேசம் நடாத்தியதாக கதையுண்டு.

என்ன செய்வது? யார், யாரை, எப்போது நம்புவது என்பதற்கும் 'அக்னி பரீட்சை' நடாத்துவதற்கும் ஒரு பாரம் பரியம் வேண்டாமோ?

கடந்த நாற்பது ஆண்டுகால அரசியல் வரலாற்றில், இன்னும் உலர்ந்து போகாத பக்கங்களை புரட்டிப் பார்த்தால், தமிழினம் ஸ்ரீலங்கா அரசை நம்பி, நம்பி. ஏமாந்த கண்ணீர் கதைகள் தான் ஏராளம்! தாராளம்!

''நம்பகத்தன்மை'' க்கு நினைக்கத்துடிக்க மாசு கற்பித்து அரசினால் கிழித்து எறியப்பட்ட ஒப்பந்தங்கள், சபையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், அரங்கேற்றப் பட்ட இனக்கலவரங்கள் சந்தித்த யுத்த களங்கள் தான் எத்தனை?

நம்பிக்கை, நாணயத்துக்கு எத்தகைய உத்தரவாதமும் அற்ற அரசியல் பாரம் பரியத்தை உடைய ஸ்ரீலங்கா அரசு தமிழினத்து பிரதிநிதித்துவம் பலமுள்ள சக்தியாக உருமாறி தலை நிமிர்ந்தவுடன், ''நம்பகத்தன்மை'' என்ற புதிய வேதம் ஓதி தனது சந்தேக சபலங்களை அம்பலப்படுத்தியுள்ளது.

''வலுவான கோலை கையில் தாங்கி இதமாகப்பேசு'' என்பது பழுத்த அரசியல் ஞானிகள் வாக்கு!

இத்தத்துவம் அரசுக்கு புரிந்துவிட்டதோ என்னவோ புதிய சந்தேகங்களும் வந்துவிட்டது போலும்!

எனவே இராணுவத் தீர்வா? அரசியல் தீர்வா எது மக்களுக்கு நல்லது என்பதிலும், தமது ஆட்சிப் பீடத்தை கட்டிக் காக்க எது துணைபுரியும் என்பதையே மையமாக வைத்து தமிழர் பிரச்சினையை, அணுகி, அரசியல் சதுரங்கம் ஆடி வரும் அரசுக்கு இத்தகைய சந்தேகம், சபலம் வருவது புதுமையல்ல!

# ஐக்கியநாடுகள் ஸ்தாபனமும் மத்தியகிழக்குபிரச்சனைகளும்

ஐ. நா. ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட காலந்தொட்டே மத்திய கிழக்கு பிரச்சனைகள் பற்றி அதன் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளதை சகலரும் அறிவார்கள். இன்றும் அதே நிலை தான். குவைத்தை ஆக்கிரமித்துள்ள ஈராக்கிற்கு பொருளாதாரத் தடையை ஐ. நா. நிறுவனம் விதித்திருப்பதுடன், ஆக்கிரமிக்கப்பட்ட குவைத்தை மீட்பதற்கு பன்னாட்டுப்படைகள் நியாயமான யுத்தத்தில் ஈடுபட ஜனவரி பதினைந்துவரை அவகாசமும் வழங்கியுள்ளது.

### புதிய பிரச்சனைகள்

எதற்கும் ஈராக் இன்று வரை வழிமுறைகளைக் காணாமல் புதிய பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றது. பாலஸ்தீன பிரச்சனையையும், ஈராக் குவைத் மீது படையெடுத்ததையும் ஒன்றுபடுத்தி பிரச்சனையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. நிலைமையைசகலரும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

3-வது உலக யுத்தம் ஒன்று உருவாகுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்து வருவதாக சமாதானத்தை விரும்பும் சகலரும் நம்புகுறார்கள். சகல நாட்டுத் தலைவர்களும் ஈராக்கிலிருந்து வெளியேறுமாறு தமது நாட்டு மக்களைக் கோரியுள்ளனர்.

### போர் நிறுத்தம்

1947 நவம்பர் மாதத்தில் ஐ. நா. பொதுச்சபையால் பாலஸ்தீன பிரிவினைத்திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து 1948 மே மாதத்தில் இஸ்ரேல்நாடு உருவாக்கப்பட்டதும், பாதுகாப்புச் சபை ஐ. நா. போர்நிறுத்த நிறுவனத்தின் மேற்பார்வையின் கீழ் ஏற்படுத்திய போர் நிறுத்த நடவடிக்கை மூலமாக இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்குமிடையே மூண்டபோர் நிறுத்தப்பட்டது. பின்னர் ஐ. நா. மத்தியஸ்தர் ஒருவருடன் இணக்கபேச்சுவார்த்தைகள் நடந்ததைத் தொடர்ந்து 1947ல் இஸ்ரேல், ஜோர்டான், லெபனான், சிரியா ஆகிய நான்கு அரபுநாடுகளும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்நாடுகளுக்கு ஐ. நா. போர்நிறுத்த நிறுவனம் உதவியது.

### அகதிகளுக்கு நஷ்டஈடு

பாலஸ்தீன சமரசக் கமிஷனை ஐ. நா, 1948ல் அமைத்தது. இதில் பிரான்ஸ், துருக்கி, அமெரிக்கா ஆகிய நாடுகள் அங்கம் வகித்தன. இக்கமிஷன் பாலஸ்தீன அரபு அகதிகள் சொந்த இடத்திற்கு திரும்பவும், திரும்பவிரும்பாத அகதிகளுக்கு நஷ்டஈடு வழங்கவும் பணித்தது.

1958ல் எகிப்துக்கு எதிராக இஸ்ரேல், பிரான்ஸ், பிரிட்டன் ஆகியவை இராணுவதலையீட்டை மேற்கொண்டதால் தோன்றிய சுவெஸ் கால்வாய் நெருக்கடியை எகிப்திய பிராந்தியத்திலிருந்து இஸ்ரேலிய, பிரெஞ்சு. பிரிட்டிஷ்படைகள் விலக்கிக் கொண்டதையடுத்து தீர்த்துவைக்கப்பட்டது. ஐ. நா, அமைதிப்படை எகிப்து இஸ்ரேல் போர்நிறுத்த எல்லைக்கோட்டையும் காஸாப் பகுதிக்கு தெற்கே சர்வதேச எல்லையையும் ரோந்து சுற்றி ஐ. நா. நிறுவனம் அமைதி காத்தது. ஐ. நா. அமைதிப் படையை ஏற்கமுடியாதென ஐக்கிய அரபுக் குடியரசு ஐ. நா. வுக்கு விண்ணப்பித்ததையடுத்து படை வாபஸாகியது.

இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்கும் மீண்டும் போர் தொடங்கியதால் 1967 ஜூன் 7ந் திகதி ஐ. நா. போர் நிறுத்தத்தை அறிவித்துச் செயல் படுத்தியது,

### மத்திய கிழக்கில் பெரும் போர்

1973ல் மத்திய கிழக்கில் பெரும்போர் மூண்டது. அரேபிய படைகள் இஸ்ரேலுடன் எகிப்திய சிரிய யுத்த முனைகளில் போர் தொடுத்தன. 1973 டிசம்பர் 21ம்திகதி போர் நிறுத்த அமுல் செயல்படுத்துமாறு ஐ.நா. உத்தரவிட்டது.

1975 டிசம்பரில் பொதுச் சபை பாலஸ்தீனிய மண்ணின் மாற்றமுடியாத உரிமைகளையும் சுயாட்சியையும் தேசிய சுதந்திரத்தையும் வற்புறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது. 75, 76ம் ஆண்டுளில் அரபு பிரதேசங்களில் இஸ்ரேல் இருப்பதை ஐ. நா. கண்டித்தது. 77ல் அரபு உலகம் பற்றிய சமாதான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன, 1980ல் ஈரான், ஈராக் போர் பற்றியும் சமரச தீர்வு பற்றியும் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வந்தன.

இந்நிலையில் ஈராக் குவைத் மீது படையெடுத்ததை ஐ. நா. கண்டித்து பலநெருக்கடிகளை ஏற்படுத்தியும் ஈராக் இன்றுவரை பேச்சுவார்த்தைக்கோ அல்லது முன்னைய குவைத் மன்னரிடம் ஆட்சியை மீண்டும் ஒப்படைக்க முன்வராமை பெரும் யுத்தமொன்றுக்கு வழிவகுக்கும் என நம்பலாம். இந்நிலையில் ஐ. நா. என்ன செய்யப்போகின்றது என்பது எவருக்கும் தெரியாது. போர் தொடங்கினால் மனிதகுலம் அழிவது மட்டும் நம்பிக்கை.

---

பிரச்சனை தீர்க்கப் படாமல், இராணுவத் தீர்வை வலியுறுத்தி ஆடும் போர்க்கள நாடக அரங்கில், பலியாவது தாங்கள் அல்ல, பொது மக்களும், படையினரும் என்பது அரசியல்வாதிகளுக்கு நன்கு புரியும்.

அரசியல் தீர்வுக்கு எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும். தமது ஆட்சி அதிகார பீடத்துக்கு ஆட்டம் கொடுத்துவிடும் என்ற சந்தேகம் இவர்களைத் தொட்டுவிட்டது.

எனவே இராணுவ தீர்வா, அரசியல் தீர்வா என்ற இரண்டுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசின் சந்தேக சபலம் எப்போது தீருமோ! யார் அறிவார்?

— மயூரன்

---

## ராசி பலன்

04-01-1991

வெள்ளிக்கிழமை

சதுர்த்தி பகல் 12-55 வரை. மகம் இரவு 10-44 வரை. மரணயோகம். இராகு காலம் பகல் 11-01 முதல் 12-27 வரை. சுபநேரம் 4-57 முதல் 5-37 வரை.

மேடம்- கருத்துமோதல், குடும்பக் கவலை, தொழில் தாய்வழி உதவி, அகால போஜன்ம்.

இடபம்- வாக்குக்கலகம், அந்நியர் தலையீடு. அதிகாரிகள் துன்பம், குடும்பத்தில் மோதல், மனக்குறை.

மிதுனம்- வேண்டியவை கிடைத்தல், அநாவசிய செலவு; வேண்டாத உறவு, குடும்ப ஒற்றுமை.

கடகம்- தொழில்போட்டி, எதிர்பாராத தொல்லை, குடும்ப கஷ்டம், பயணங்களால் அலைச்சல்.

சிங்கம்- வீட்டில் சுபகாரியம், இனசன வ வு, பணச் செலவு, தொழில் லாபம், புத்திரர் மகிழ்ச்சி.

கன்னி- வீண் தொல்லை. நிறைவேறாத காரியம், தாமதகுணம், தொழில் பாதிப்பு, குடும்பபிரிவு.

துலாம்- காரிய பலிதம், தொழில் லாபம். குடும்ப மகிழ்ச்சி, பணியாள் சகாயம், பயணம்

விருச்சிகம்- தியாக சிந்தை தானதர்மம், தொழில் மாற்றம், தீர்க்கமான யோசனை.

தனுசு- வீண்குறைகேட்டல், குடும்ப ஒற்றுமை, அந்நியர் உதவி, அதிகாரம். பண வரவு.

மகரம்- நோய் உபத்திரவம், தொழில் குறைவு, அந்நிய வாசம் குடும்ப பிரசினை.

கும்பம்- தொழில் முயற்சி, பணப் பிரச்னை, சோம்பல் மிகுதி, அதிகாரிகள் பாராட்டு.

மீனம்- வாக்கு வன்மை, பொதுப்பணி, தொழில் சிறப்பு குடும்ப உல்லாசம், வேலைப்பளு.

'ஜோஸ்யர்'

---

## வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகஸ்தியர் சிறுகதைகள் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வண. பிதா ஜெயசீலன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் வெளியீட்டுரையும், புத்தொளி அறிமுகவுரையும் நிகழ்த்துவார்கள்.

மல்லிகைப்பந்தல் ஆதரவில் நடைபெறும் இவ்வெளியீட்டு விழா யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தொடர்பகத்தில் நடைபெறவுள்ளது.

## இன்று ஆசிரியர்கள் கருத்தரங்கு

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டத்தில் கடமையாற்றும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு யா. மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். மேற்குறிப்பிட்ட சகல ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கோட்டக்கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் பணித்துள்ளார்.


கணிதப் பிரிவு மாணவர்கட்கு

A/L 90, 91, 92

திரு. நல்லையா

திரு. கிருஸ்ணா

ஆகிய தரமான ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

ஒவ்வொரு பிரிவிற்கும் மாதத்திற்கு 35 மணித்தியாலத்திற்குக் குறையாத வகுப்புக்கள்)

மேலதிக விபரங்கட்கு:

NEW MASTER INSTITUTE

B.M.C. LANE, - JAFFNA.

(ஏ 956)

குமணகப்பலில்

# மக்கள் வங்கிக்கு 2½ கோடி ரூபா வரும்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து குமண கப்பல் நேற்று பருத்தித்துறை நோக்கி புறப்பட்டது.

இந்தக் கப்பல் நாளை சனிக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பலில் 3000 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களும், மக்கள் வங்கி யாழ். பிராந்தியத்திற்கு இரண்டரைக் கோடி ரூபா பணமும். தபால் பொதிகளும் வருகின்றன.

அக்டோபர் - டிசம்பர்வரையுள்ள பென்சன் வவுச்சர்களும் இதில் கொண்டுவரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (153)

## இன்று சாம்பியன் மோதல்

(புதுடில்லி)

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் சாம்பியன் மோதல் இன்றுகாலை இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் கல்கத்தாவில் நடைபெறவுள்ளது. (வி)

## யாழ். செயலக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தால் உடனே பிறப்பு விண்ணப்பங்களை ஏற்கும் கருமபீடங்களைத் திறந்து விண்ணப்பங்களைப் பொதுமக்களிடமிருந்து ஏற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மேலதிக மாவட்டப் பதிவாளர் தெரிவித்தார்.

## நாற்பது தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மாத இறுதியில் வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு சென்ற இந்தப் பொலிஸாருக்கு சம்பளம் வழங்கப்பட்டதும் அவர்கள் வீடு திரும்ப அனுமதிக்கப்படவில்லை.

சிலநாட்கள் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் அனைவரும் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுமாறு பலவந்தமாக பணிக்கப்பட்டார்கள்.

இந்த திடீர்நடவடிக்கையையடுத்து இப்பொலிசார் ஒன்றும் செய்யமுடியாத நிலையில் பேலிடத்தின் பணிப்பிற்கு கட்டுப்படவேண்டிய நிலையேற்பட்டது. (ரி)

## கடைஉரிமையாளர் அடித்துக் கொலை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டருக்கு அருகாமையில் வைத்து கடந்த 31-ம் தேதி இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்ட கே, கே. எஸ். வீதியிலுள்ள நகைக்கடை உரிமையாளரான ராஜகோபால் சந்திரன் சடலமாக நேற்றுமாலை கல்லுண்டாய் வெளியில் மீட்கப்பட்டார்.

கடத்திச் சென்றவர்கள் இவரைச் சித்திரவதைசெய்து பின்பு அடித்துக் கொலை செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. [வி]

## இருவர் விடுதலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போது கைதுசெய்யப்பட்டனர்.

இன்னும் நால்வர் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (153)

## கிழக்கு அகதிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களில் மேற்படி குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

நாகர்கோயிலில் அமைக்கப்பட்ட தற்காலிக நூறு குடிசை வீடுகளும் நூறு குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (153)


New Science Academy

KANNATHIDY. JAFFNA.

PHYSICS

திரு. நந்தகுமார் B. Sc

91 A/L — MON 4-6 புலங்கள் (நிலைமின்னியல்) TUE, THU 5-6 மின்னியல்

90 A/L — MON 2-3 காந்தவியலும் மின்காந்தவியலும் TUE, THU 3-4 வினாவிடைவகுப்பு

92 A/L — SAT, SUN விரைவில் ஆரம்பம்

ஆரம்பம்: 07-01-1991

(எ 967)


## விடுதலைப் புலிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

யின் இறைமையையும் உறுதிப்பாட்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கில் ஆயுதங்கள் வைத்திருக்க அதிகாரம் இல்லாதவர்கள் ஆயுதம்வைத்திருக்ககூடாது

வடக்கிலும் - கிழக்கிலும் பொது நிர்வாகம் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும்.

வடக்கிலும் - கிழக்கிலும் சகல அரசியல் கட்சிகளும் சுதந்திரமாக செயல்பட வழி செய்யப்பட வேண்டும். (க)

## மின்சார

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகிறது.

திருத்தவேலைகள் பூர்த்தியானவுடன் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு மின்சாரம் கிடைக்கவுள்ளது.

இதேவேளையில் யாழ். மாவட்டத்துக்கான ரான்ஸ்போமர் ஒயிலை அனுப்புவதற்கு அரசு ஆராய்ந்துவருவதாக தெரியவருகிறது. முன்னர் மாங்குளம் இராணுவ முகாம் இருந்த இடத்துக்கு அருகாமையில் இலங்கை விமானப்படை குண்டுகளை வீசி 133 கே. வி. கேபிள்களை சேதப்படுத்தியதால் கிளிநொச்சி மாவட்டத்துக்கான மின்சாரம் தடைபட்டிருந்தது. லக்சபான மின்சாரமும் இதேபோல் நாசப்படுத்தப்பட்டதால் மின்சாரம் தடைப்பட்டிருந்தது. [எஸ்]

## வ. பி. போ. சபைமீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுவீச்சுத் தாக்குதலினால் இந்த சபையில் கடமையாற்றிய ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது'' என்று தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

''இந்தக் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலினால் எமது போக்குவரத்துச் சபை நிறுவனத்தின் தலைமைக் காரியாலயம், பொறியியல் பகுதி, திருத்தவேலைப் பகுதி, விநியோகப் பகுதி உட்படப் பல கட்டிடங்களுக்கும் சொத்துக்களுக்கும் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினால் எமது ஸ்தாபன ஊழியர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்டது.

''அரசின் இந்தச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.'' [ரி]


இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.


## இராணுவ நடவடிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை தொடர்ந்து மேலும் 7 நாட்களுக்கு நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

## உணவுற்பத்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மக்கள் முன்னணி செயலர் திரு. யோகரத்தினம் யோகி நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு திரு. வே. பாலகுமார் உரையாற்றும் போது உணவுப் பழக்கங்கள் மற்றும் ஏனைய சகல நடவடிக்கைகளிலும் அந்நிய நாட்டுப் பழக்கவழக்கங்களையே பின்பற்றிவருகிறோம். இந்நிலையிலிருந்து விடுபட்டு, உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்கும் முயற்சியில் புத்திஜீவிகள் ஈடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர். [க]

## மிதிவெடியால் பலத்த சேதம்

[மன்னார்]

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து நேற்று இராணுவத்தினர் முள்ளிக்குளம்சந்தியைநோக்கி சென்றபோது மிதிவெடிகளில் சிக்கியதில இராணுவத்தினருக்கு பலத்த சேதம ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இராணுவத்தினர் தமக்கு ஏற்பட்ட சேதங்களுடன்மீண்டும் முகாமிற்குள் சென்றுவிட்டதாகத் தெரியவந்துள்ளது. [வி]

## பிரதிப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனர்வாழ்வு புனரமைப்பு செயல் திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தனது பதவியுடன் மேலதிகமாக வர்த்தகத் திணைக்கள யாழ். மாவட்ட பிரதிப்பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.


NEW SCIENCE ACADEMY

KANNATHIDY, JAFFNA,

ஆரம்பமாகிவிட்டது

PURE / APPLIED } MATHS

சந்திரமோகன்

91 A/L — MON. TUE. 2 - 4
APP:- ★ ஒருதள விசைகள்
PURE:- ★ வகையீட்டின் பிரயோகம்

92 A/L — MON. TUE. 4 - 6 THU. 2 - 4
APP:- ★ காலிகள்
PURE:- ★ திரிகோண கணிதம்

90 A/L — MON. WED. FRI. 11-30 - 1-30
APP:- { சடத்துவதிருப்பம் / எளிமை விசை இயக்கம்
PURE:- { ஆகன் வரைபடம் / நிகழ்தகவு

(எ-968)


## மரண அறிவித்தல்

### மழலைச்செல்வம் ஸ்ரீகௌதமி

மழலைச்செல்வம் ஸ்ரீகௌதமி 3-1-91 ல் (நேற்று) காலமானார். இவர் டாக்டர் ஸ்ரீஜீவகன் [சிவலிங்கம் வைத்தியசாலை] திருமதி ரசிலா ஸ்ரீஜீவகன் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், வைத்தியர் சி. சிவலிங்கத்தின் பேத்தியுமாவார். ஈமக்கிரியைகள் நேற்று [3-1-91 ல்] நடைபெற்றது.

24, சச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: க. பரராஜசேகரன்

(கி 4237)